MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8 / MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

சங்க இலக்கியத்தில் வேட்டை விலங்குசார் குறிப்புகள்

க. விஜயலட்சுமி,

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,

பாரதியார் பல்கலைக்கழகம்;, கோயம்புத்தூர் - 46.

gvijayalakshmi17102000@gmail.com அழைப்பு : 63830 13537.

முனைவர் ம.ஆதித்தசோழன்,

உதவிப்பேராசிரியர், அறிவியல் மற்றும் மனிதநேயத்துறை,

தானிஷ் அகமது தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர் -05,

athiththachozhan@gmail.com, அழைப்பு : 76397 81632.

MAY - JUNE

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

Hunting and Wild Animals in Sangam Literature

G. Vijayalakshmi,

Research Scholor, Department of Tamil,

Bharathiar University, Coimbatore -46.

gvijayalakshmi17102000@gmail.com, Contact No : 63830 13537.

Dr. M. Athiththachozhan,

Assistant Professor, Department of Science and Humanities,

Dhaanish Ahmed Institute of Technology, Coimbatore -05.

athiththachozhan@gmail.com, Contact No : 76397 81632.

Abstract

The search for food is an important part of the basic lifestyle of the Tamil community. The eating habits of the people of the Sangam age varied according to their terrain and millet divisions. Humans have used dogs to meet their dietary needs; in Sangam Literature, dogs have been called by many names, such as nomad, herding dog, fairy dog, and hunting dog. In addition, these dogs were fast, sharp-sighted, possessed great strength and courage, and were used to hunt animals such as foxes, deer, and porcupines. This article examines in detail the types of hunting dogs, the training given to them, and the importance given to hunting dogs in the society of the Sangam age.

Key Words

Hunting dog, Hound or Dog, Male dog, Prowling dog / Stray dog

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

ஆய்வுச்சுருக்கம்

தமிழ்ச் சமூகத்தின் அடிப்படை வாழ்வியலில் உணவுத் தேடல் என்பது ஒரு முக்கிய அங்கமாகும். சங்க கால மக்களின் நிலப்பரப்பு மற்றும் திணைப் பிரிவுகளைப் பொறுத்து அவர்களின் உணவு உண்ணும் முறை மாறுபட்டன. மனிதர்கள் தங்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாய்களைப் பயன்படுத்தினர். சங்க இலக்கியத்தில் ஞமலி, ஏற்றை நாய், பரியல் நாய், வேட்டை நாய் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளன. மேலும், இந்நாய்கள் வேகமாகவும், கூர்மையான பார்வையும், மோப்ப சக்தி மற்றும் தைரியம் ஆகியவற்றைக் கொண்டிருப்பதோடு, உடும்பு, மான், முள்ளம்பன்றி போன்ற விலங்குகளை வேட்டையாடப் பெரிதும் பயன்படுத்தின. இவ்வாய்வுக்கட்டுரையானது வேட்டை நாய்களின் வகைகள், அவற்றிற்கு அளிக்கப்பட்ட பயிற்சி மற்றும் சங்க காலச் சமூகத்தில் வேட்டை நாய்களுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் ஆகியவற்றை விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

திறவுச்சொற்கள்

வேட்டை நாய், ஞமலி, ஏற்றை நாய், பரியல் நாய்.

முன்னுரை

தமிழ்ச் சமூகத்தின் அடிப்படை வாழ்வியலைத் தீர்மானிப்பதில் உணவுத் தேடல் மற்றும் நுகர்வு மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. மக்களின் வாழ்விடமான ஐந்து நிலப்பரப்பின் சூழல் மற்றும் அதன் திணைப்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

பிரிவுகளைப் பொறுத்து, உணவும், உணவு ஈட்டும் முறைகளும் வேறுபட்டன. இவ்வாறு உணவு ஈட்ட பல வழிகளில், இம்மனூட சமூகம் இருந்தது. இதில் வேட்டையாடுதல் ஒரு முதன்மையான மற்றும் இன்றியமையாதாக விளங்கின. இந்த வேட்டையில், மனிதன் தனது வேட்டைத் திறனுக்குத் துணையாகச் சில விலங்குகளைப் பயன்படுத்தினான். அவை, வேட்டை நாய், ஞமலி, ஏற்றை நாய், பரியல் நாய் போன்ற நாயின் வகைகளை வேட்டைக்கு பயன்படுத்தினர். குறிப்பாக, வேட்டை நாய்களை வைத்து உடும்பு, மான் போன்றவற்றை வேட்டையாடிய பதிவுகளும் அக்கால மக்களின் மரபறிவும், அவர்களின் உணவு மரபறிவையும் புரிந்துகொள்ள முடிகின்றன.

சங்ககால உணவுத் தேவையில், வேட்டை நாய்கள் எந்த வகையில் உதவின, அவை எவ்வாறு பயிற்சியளிக்கப்பட்டன, மற்றும் அக்கால சமூகத்தில் அவற்றுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் என்ன என்பது குறித்து இவ்வாய்வுக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது. இதில் வேட்டை நாய் அறிமுகம், சங்க இலக்கியத்தில் வேட்டைநாய் என்கின்ற முறையில் ஆராயப்பட்டுள்ளது.

வேட்டை நாய் அறிமுகம்

வேட்டை நாய்கள் வேட்டைக்காரர்களுக்கு உதவும் வகையில் பயிற்சி கொடுக்கப்பட்டவை. இந்நாய்களுக்கு இயற்கையாகவே வேட்டையாடும் திறன்; அதிகமாக காணப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் வேகமான ஓடும் திறன் கொண்டவை, கூர்மையான பார்வை, அதிக மோப்ப சக்தி ஆகியவற்றைக் கொண்டவையாக திகழ்கின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

இதில் குறிப்பிட்ட இன மக்கள் மட்டும் பல நூற்றாண்டுகளாக வேட்டையாடுவதற்காகவே சில தனித்துவமான நாய் இனங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. அவற்றில் ஒன்று “ராஜபாளையம் நாய்கள் இது வெள்ளை நிறத்தில் இருக்கும் இந்த நாய் மிகவும் கம்பீரமானது. இது வேட்டைக்கு மட்டுமல்லாமல், காவல் காப்பதிலும் சிறந்தது.

இரண்டாவதாக, கன்னி வகை நாய்கள் வேகமாகவும், துல்லியமான பார்வையும் காணப்படும். இது ஓடும் விலங்குகளைத் துரத்திப் பிடிப்பதில் திறமை வாய்ந்தது. இதன் உடலில் கருப்பு நிறம் அதிகமாக காணப்படும். மூன்றவதாக சிப்பிப்பாறை இது ஒரு சிறந்த ஓட்ட நாய். மிக வேகமாக ஓடும் திறன் கொண்டது. இதன் உடல் அமைப்பு மெலிந்து, உடல் வலுவாக காணப்படும்.”1 நான்கவதாக கோம்பை நாய் இது தைரியம் மற்றும் ஆக்ரோஷமான நாய். இதன் மோப்ப சக்தியை வைத்து மக்கள் வேட்டையாட அதிகம் பயன்படுத்துகின்றன.

சங்க இலக்கியத்தில் வேட்டை நாய்

சங்க இலக்கியத்தில் வேட்டை நாய்களை வைத்து சங்க மக்கள் எப்படியெல்லாம் வேட்டையாடி அவ்வுணவினை உண்டும், சேமித்தும் மக்கள் வாழ்ந்து வந்தனர் என்பதைச் சங்க பாடல்கள் பின்வருமாறு சுட்டுகின்றன. அவை,

“கல்லென் கானத்துக் கடமா ஆட்டி
எல்லும் எல்லின்று ஞமலியும் இளைத்தன” 2

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

கல்லென்னும் ஓசையையுடைய காட்டின்கண், கடமானை வேட்டையில் அலைத்துப் பகற்பொழுது கழிந்தது. அதனைத் துரத்திச் சென்ற வேட்டைநாய்களும் இளைத்தன. தலைவன் வேட்டையாடிய பிறகு தலைவியைச் சந்திக்க வந்தான். அவன் வந்த போது சூரியன் மறைந்து இருள்சூழ ஆராம்பித்தது. இன்றிறவு எங்கள் ஊரில் தங்கிச் செல்வாயாக என்று தோழி தலைவனிடத்தில் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

“பரியல் நாயொடு பல் மலைப் படரும்

வேட்டுவற் பெறலொடு அமைந்தனை யாழ நின் ”3

தலைவிக்குக் கூறுவதாக சிறைப்புறமாக நிற்கும் தலைவனுக்கு செவிகளில் கேட்பத் தலைவியிடம் தோழி கூறும் பொருட்டு, தேன் ஒழுகும் மாலை அணிந்துக்கொண்டு, வேட்டை நாயுடன் வந்த உன் வேட்டுவன் அழகில் முருகனோடு போட்டி போடுபவனாக இருக்கிறான். எனவே, இப்பாடலில் வேட்டைக்கு போய் நாயுடன் திரும்பி வந்த தலைவனின் அழகை முருகனோடு ஒப்பிட்டு கூறுகிறாள்.

“கல்லா நீள் மொழிக் கத நாய் வடுகர்” 4

தலைவன் கடந்து வரும் சுரவழிப் பாதையின் கொடுமையினைக் கூறும் பொருட்டு, இரவில் புலி, ஆண்மானின் வயிற்று கறியைத் உண்ணும். அதில் மிஞ்சிப் போய்க் கற்பாறையில் உலர்ந்து கிடக்கும். அப்படிபட்ட வழியில் வடுகர் இன மக்கள் நாயுடன் சென்று வேட்டையாடி வாழுகின்றனர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

"ஓட்டு இயல் பிழையா வயநாய் பிற்பட
வேட்டம் போகிய குறவன் காட்ட" 5

குறவன் இனிய பலாப்பழத்தின் சுளையினின்றும் விளைந்த தேனை, ஒலியைவிட வேகமாக பாயும் அம்பினையுடைய இளைய வீரர்கள் நிறையக் குடித்தனர். தப்பாது விலங்குகளைத் துரத்திப் பிடிக்கும் இயல்பு கொண்ட வலிய வேட்டை நாய்கள் பின்னே வர முள்ளம் பன்றியைக் கொன்று வீழ்த்துவதற்கு வேட்டைக்குச் சென்றான். இப்பாடலில் குறவர்கள் நாய்களை வைத்து வேட்டையாடிய செய்திகளை அறிய முடிகின்றது.

"வயநாய் எறிந்து, வன்பறழ் தழீஇ
இளையர் எய்துதல் மடக்கி கிளையொடு" 6

பயமறியாது ஆண் பன்றியானது வலிமை மிக்க வேட்டை நாயைச் சினந்து எதிர்த்து விரட்டி தன்னை நோக்கி வேடர்கள் நெருங்கி வருதவதைத் தடுத்து நிறுத்தி, தொங்கும் முலையினையுடைய பெண் பன்றியும், தன்னுடைய குட்டிகளையும் தப்பிப் பிழைத்துப் போகுமாறு ஆண் பன்றி செய்யும் என ஆசிரியர் கூறுகிறார்.

"வெள் வசிப் படீஇயர், மொய்த்த வள்பு அழீஇ,
கோள் நாய் கொண்ட கொள்ளைக்
கானவர் பெயர்க்கும் சிறுகுடியானே" 7

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

காட்டு நாய்கள் சூழ்ந்து பன்றியைக் கொன்று மிகுதியான தசைகளைக் கொண்டு செல்லாத வண்ணம் அவற்றை கடிக்கும். பன்றியின் தசையினைக் கடிக்கும் நாய்களைக் கானவர்கள் விலக்குவர். விலக்கிய பின்பு அவ்விறைச்சியைச் சிறுகுடிக்குக் கொண்டு வந்து உண்ணுகின்றனர்.

“கோடு துவையா கோள் வாய் நாயொடு

காடு தேர்ந்து அசைஇய வய மான் வேட்டு

வாயவ் மகளிர் என்றி ஆயின,”8

வேட்டுவர்கள் கொம்பு ஊதிக்கொண்டு, காட்டில் நாயுடன் அலைந்து உணவு தேடி உண்டு வாழுவர். இவர்களை வேட்டுவ வயவர் மகளிர் என்று எங்களை அழைப்பர். நற்றிணைப் பாடலில் வேட்டுவ மகளிர் வேட்டையாடிய செய்தியை அறிய முடிகின்றது.

“வன் கைக் கானவன் வெஞ் சிலை வணங்கி,

உளமிசைத் தவிர்த்த முளவுமான் ஏற்றையொடு,

மனைவாய் ஞமலி ஒருங்கு புடை ஆட,”9

குன்ற நாட்டில் வாழ்ந்த கானவன் வில்லை வளைத்து அம்பை எய்து ஆண் முள்ளம் பன்றியை எடுத்துக்கொண்டு தன்னைச் சுற்றி வரும் வேட்டை நாயுடன் மகிழ்வுடன் இல்லம் திரும்பியதாக இப்பாடல் குறிப்பிடுகின்றது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

"கான் உறை வாழ்க்கை, கத நாய், வேட்டுவன்

மான் தசை சொரிந்த வட்டியும்,"10

வேட்டுவன் நாய்த் துணையுடன் வேட்டையாடிக் கொண்டு வந்த மான் தசையைக் கொடுத்துவிட்டு நெல்லைப் பெற்றுச் செல்வதாக இப்பாடல் கூறுகின்றது.

புறநானூற்றுப் பாடலில் பண்டமாற்று முறையாக வேட்டுவர்கள் மான் தசைக்கு ஈடாக நெல்லை பெற்றுச் சென்றுள்ளதை காண முடிகின்றது.

"மான் கணம் தொலைச்சிய கடு விசைக் கதநாய்,

நோன் சிலை வேட்டுவ" 11

கதகதநாய்கள் அதீத மோப்ப சக்தியைக் கொண்டவை. அவை காட்டில்; உணவிற்காக சுற்றிதிருந்திருக்கும் மான் கூட்டங்களை வளைத்துப் பிடித்து வேட்டுவனிடம் தரும்.

"காட்டீபாய் ஆயின், கதநாய் கொளுவுவேன்:

வேட்டுவர் உள்வழிச் செப்புவேன்,"12

வரைவிடை வைத்துப் பிரிவு நீட்டித்த தலைவனை நினைத்து தலைவி அறிவு மலிந்து கூறத்தகாத வார்த்தைகளைக் கூறும் பொருட்டு, அக்கூற்றிடத்தே தலைவியானவள் முயலோடு பேசுகிறாள். உலகமெல்லாம் பார்த்து வருகின்றாயே என் காதலனை

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

எங்கேயிருக்கின்றான் என்று காட்டாயோ? காட்டவில்லையானால், வேட்டை நாயை ஏவிவிடுவேன்.

அது மட்டுமின்றி வேட்டுவர் உள்ள இடத்திற்கு சென்று ஒரு முயல் இருக்கிறது என்று கூறுவேன் என்று முயலுக்கு அச்சத்தை ஏற்படுத்துமாறு கூறுகிறாள்.

“அரைநாள் வேட்டம் அழுங்கின், பகல்நாள்,

பகுவாய் ஞமலியொடு பைம்புதல் எருக்கி,

தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி,”13

முன்னிரவு வேட்டை வாய்க்காமல் போனால் பின்னிரவில் கானவன் முயல் வேட்டையில் ஈடுபடுவது வழக்கம். முயலின் காது தாமரை இதழ் போல இருக்கும். கானவர் வேட்டைநாய்களோடு முயல் வேட்டைக்குச் செல்வார்கள். இரண்டு வேலிகளுக்கு இடையே வலையைத் தொடுத்துக் கட்டி முயலை பிடிப்பர். இப்பாடலில் முயலுக்கு வலை கட்டி முயலைப் பிடிக்கும் செய்தி கிடைத்துள்ளது.

“சுவல்விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி

ஞமலி தந்த மனவுச்சூ லுடும்பின்” 14

செந்நெல் ஒரு புன்செய்ப் பயிர். மேட்டு நிலத்தில் மழைநீரைக் கொண்டு விளையும். களர் நிலத்தில் வளர்ந்து காய்த்துப் பழுக்கும் ஈச்சம்பழம் போல இருக்கும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

முள்ளம் பன்றியும், உடம்பையும் வேட்டைநாய்கள் பிடித்து கொடுக்கும். அவ்விறைச்சியைக் கானவர் வீடுகளில் கிடைக்கும்.

“முளைவாள் எயிற்ற, வள் உகிர், ஞமலி” 15

சினம் கொண்டு நோக்குதல் நாயின் இயல்பாகும். வேட்டை வாய்க்காததால் மகிழ்ச்சியில்லாத கண்களோடு வேட்டைநாய்கள் பல் தெரிய அவனைச் சூழ்ந்து வருகின்றன.

“வரை ஆடு வருடைத் தோற்றம் போல,

கூர் உகிர் ஞமலிக் கொடுத்தாள் ஏற்றை” 16

வரையாடு ஏறி விளையாடுவது போல வேட்டையாடும் ஆண் நாய்களும், முட்டித் தாக்கும் செம்மறியாட்டுக் கிடாக்களும் முற்றங்களில் அடுக்கியுள்ள மூட்டைகளின் மேல் ஏறித் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன.

முடிவுரை

சங்க இலக்கியத்தில் வேட்டை நாய் என்னும் விலங்கு பலப் பெயர்களில் அழைக்கின்றனர். அவை, ஞமலி, ஏற்றை நாய், வேட்டைநாய் போன்றவையாகும். வேட்டுவர்கள் உணவிற்காக நாய்களை வைத்து வேட்டையாடி வாழ்வதாக சங்க இலக்கியப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

குறிப்புகள்

1. http://tamil.thehindu.com/general/environment
2. நாகராசன். வி., முனைவர்., (உ.ஆ), 2017., குறுந்தொகை தொகுதி -1 (மூ.உ)., பா. 179.
3. செயபால். இரா., முனைவர்., (உ.ஆ)., 2017., அகநானூறு தொகுதி -1 (மூ.உ) பா. 28.
4. மேலது , பா. 107.
5. மேலது , பா. 182.
6. செயபால். இரா., முனைவர்., (உ.ஆ)., 2017., அகநானூறு தொகுதி -2 (மூ.உ) பா. 248
7. பாலசுப்பிரமணியன். கு.வெ., முனைவர்., (உ.ஆ)., 2017., நற்றிணை (மூ.உ) பா. 82.
8. மேலது , பா. 276.
9. மேலது , பா. 285.
10. பாலசுப்பிரமணியன். கு.வெ., முனைவர்., (உ.ஆ)., 2017., புறநானூறு தொகுதி -1 (மூ.உ) பா. 33.
11. பாலசுப்பிரமணியன். கு.வெ., முனைவர்., (உ.ஆ)., 2017., புறநானூறு தொகுதி -2 (மூ.உ) பா. 205.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

12. விசுவநாதன். அ., முனைவர் (உ.ஆ), 2017., கலித்தொகை (மூ.உ) பா. 144.

13. மோகன். இரா., முனைவர்., (உ.ஆ), 2017., பத்துப்பாட்டு தொகுதி -1 (மூ.உ)., பெரும்பாணாற்றுப்படை., பா. வரி. 112.

14. மேலது , பா. 132.

15. நாகராசன். வி., முனைவர்., (உ.ஆ), 2017., பத்துப்பாட்டு தொகுதி -2 (மூ.உ)., குறிஞ்சிப்பாட்டு., பா. வரி. 131.

16. மோகன். இரா., முனைவர்., (உ.ஆ), 2017., பத்துப்பாட்டு தொகுதி -1 (மூ.உ)., பட்டினப்பாலை., பா. வரி. 140.